**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

தேதி : 08.05.2023

பெறுநர்
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் இன்றைய நிகழ்ச்சி பகுதியில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

<u>இன்றைய நிகழ்ச்சி (09.05.2023)</u>

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதை மையம், கோயம்புத்தூர் மற்றும் இவேஆக - இந்திய விதை அறிவியல் நிலையம், மாவ் இணைந்து “26வது ஆண்டு வல்லுநர் விதை ஆய்வுக் கூட்டம் மற்றும் 38வது ஆண்டு அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் விதை (பயிர்) குழு கூட்டம்” 2023 - ம் ஆண்டு, மே 9 மற்றும் 10 தேதிகளில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அண்ணா அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான துவக்க விழா, மே 9 ஆம் தேதி காலை 9 மணிக்கு அண்ணா அரங்கத்தில் நடைபெறுகிறது. அவ்வமயம், இந்திய விதை அறிவியல் நிலையத்தின் இயக்குநர் முனைவர் சஞ்சய் குமார் அவர்கள் வளர்ச்சி அறிக்கையை வெளியிடுகிறார். கௌரவ விருந்தினராக உதவி இயக்குநர் பொது (விதை), முனைவர் டி.கே.யாதவா மற்றும் சிறப்பு விருந்தினராக துணை இயக்குநர் பொது (பயிர் அறிவியல்), முனைவர் டி. ஆர். சர்மா ஆகியோர் பங்கேற்கின்றனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர். வெ. கீதாலட்சுமி, அவர்கள் தலைமையுரையாற்றுகிறார்.

நாள் **:** 09.05.2023 (செவ்வாய்க்கிழமை)
நேரம் **:** காலை 9.00 மணி
இடம் **:** அண்ணா அரங்கம்,
தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

மக்கள் தொடர்பு அலுவலர்

இணைப்பு**:** நிகழ்ச்சி அழைப்பிதழ்